

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் சத்திரம் பகுதியில் உள்ள உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 10 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 7 மேல்நிலை நீர் தேக்க தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி துரை சந்திரசேகர், நகராட்சி நிர்வாக இயக்குநர் சு.சிவராசு, ஆவடி மாநகராட்சி, மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. இராஜ்குமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், ஆவடி மாநகராட்சி மண்டல தலைவர்கள் அம்முபொன்.விஜயன், அமுதா பேபிசேகர், ஜி. ராஜேந்திரன், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்

# 11-வது மாநில வேலை உறுதி மன்றக் குழுக் கூட்டம்!

## அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.13- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 11வது மாநில வேலை உறுதி மன்ற குழுக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, அவர்களின் தலைமையிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, முன்னிலை யில், தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை, 8வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கத்தில் நேற்று 12.11.2024 நடைபெற்றது.



தலைமைச் செயலகத்தில், நேற்று (12.11.2024) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 11 வது மாநில வேலை உறுதி மன்ற குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநர் பா.பொன்னையா, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கி.கலைவாணன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை பிரதிநிதிகள், காந்திகிராம் அறக்கட்டளை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் தலைமையுரை வழங்கப் பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் 89.97 கோடி மனித சக்தி நாட்கள் எய்தப்பட்டுள்ளன. இதில் 202425ம் ஆண்டில் இதுவரை 15.64 கோடி மனித சக்தி நாட்கள் எய்தப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த் திட இயற்கை வள மேலாண்மை, வேளாண்மை சார்ந்த பணிகள், ஊரகசாலை இணைப்பு, ஊரகக் கட்டமைப்பு, நில மேம்பாட்டு பணிகள் மற்றும் தனிநபர் சொத்து உருவாக்கம் போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் கடந்த மூன்றாண்டு களில் மொத்தம் 13.64 இலட்சம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 202425ம் ஆண்டில் இதுவரை 1.89 இலட்சம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 3,743 அங்கன்வாடி மையங்கள், 2,187 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 803 உணவு தானியக் கிடங்குகள், 3,401 பள்ளிகளுக்கான சமையலறைக் கூடங்கள், 8,025 பள்ளிகளுக்கு சுற்று சுவர் கட்டுதல், 22,419 தடுப்பணைகள், 16,476 பண்ணைக்குட்டைகள், 8,543 தனி நபர் கிணறுகள் மற்றும் பொது கிணறுகள், 21,455 பேவர் பிளாக் சாலைகள் மற்றும் 20,241 சிமெண்ட் சாலைகள், 12,727 ஒரடுக்கு ஜல்லி சாலைகள் கடந்த மூன்றாண்டுகளில் செயற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மொத்தம் 825 வட்டார நாற்றாங்கால்களில் வளர்க்கப்பட்ட 1.25 கோடி மரக்கன்றுகள் ஊரகப்பகுதிகளில் நடப்பட்டு, தமிழகத்தின் பசுமை போர்வையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைகள் மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தருமபுரி மக்களவைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தஞ்சாவூர் மக்களவைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.பூண்டி. கி.கலைவாணன் ஆகிய உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் பா.பொன்னையா, நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கூடுதல் இயக்குநர் (MGNREGS) ச.சா.குமார், வேளாண் உற்பத்தி மற்றும் உழவர் நலத் துறை, நிதித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர், தேனி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் மற்றும் ஆறு ஊராட்சி மன்ற தலைவர்களும் மற்றும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் காந்திகிராம் அறக்கட்டளை ஆகிய இரு அரசு சாரா நிறுவன (NGO) பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## அரசு ஊழியர்களை ஒடுக்கிய கபட வேடதாரி பழனிசாமி, அரசு ஊழியர்கள் நலன் பற்றிப் பேசலாமா?

# அரசு ஊழியர்கள் தி.மு.க. பக்கம்தான் நிற்பார்கள் என்பதை தேர்தல் வரலாறு சொல்லும்!

## நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!



சென்னை, நவ.13- எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு :-

அரசு ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் வெளியிட்ட அறிக்கை 'மொட்டை'த் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல இருக்கிறது. 'சசிகலா காலில் ஊர்ந்து சென்று முதல்வர் பதவி வாங்க முடியும்' என அரசியலில் புதிய Thesis படைத்து Ph.D. பட்டம் பெற்ற பழனிசாமி 'கபட வேடதாரி' என்றெல்லாம் பேசலாமா?

அரசு ஊழியர் தொடர் பாகத் தி.மு.க. வெளியிட்ட விளக்க அறிக்கையை 'மொட்டைக் காகித அறிக்கை' எனச் சொல்லியிருக்கிறார் பழனிசாமி. மொட்டைக் காகித அறிக்கை என்றால், அதனை எப்படிப் பத்திரிகைகள் பிரசுரித்திருக்கும்? டிவி சேனல்கள் செய்தி வெளியிட்டிருக்கும்? என்ற அடிப்படைகூட தெரியாமல் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இருப்பாரா

### மொட்டை காகித அறிக்கை அ.தி.மு.க.விற்கே உரித்தானது!

'மொட்டைக் காகித அறிக்கை' என்றால் அது அ.தி.மு.க. என்பதுதானே உலக வரலாறு! ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் 2011-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளின் தொகுதிகளுக்கும் சேர்த்து 'மொட்டையாக' வேட்பாளர் பட்டியல் வெளியானது; 2007-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் 'எனக்குத் தெரியாமலேயே என் கட்சி எம்.எல்.ஏ-க்களும் எம்.பி-க்களும் வாக்களிக்கப் போனார்கள்' என ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டது; டான்சி வழக்கில், 'ஆவணத்தில் உள்ளது என் கையெழுத்தே இல்லை' என ஜெயலலிதா சொன்னது எல்லாம் அ.தி.மு.க அடித்த மொட்டைதானே!

அனைத்துப் பிரிவு மக்களையும் அரவணைத்துச் செல்வதுதான் ஒரு அரசின் கடமை. அரசு ஊழியர்கள் கூட குடிமக்கள்தான். ஆனால், அவர்களை அ.தி.மு.க. என்றைக்குமே மதித்ததில்லை. ஆனால், எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சியாக இருந்தாலும் அரசு ஊழியர்களைக் கனிவாகவே தி.மு.க. நடத்தும். ஜெயலலிதா, பன்னீர்செல்வம், பழனிசாமி என யார் ஆட்சியில் இருந்தாலும் அ.தி.மு.க. ஆட்சியில் அரசு ஊழியர்கள் ஒடுக்கப்பட்டனர். அவர்களின் கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்பட்டன. உரிமைக்கானப் போராடியவர்கள் மீது வழக்குகளும் துறைரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பதுதான் கடந்த கால வரலாறு.

### அரசு ஊழியர்களை அவமானப்படுத்தியவர் ஜெயலலிதா!

2001-இல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா 24-7- 2001 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற அரசு ஊழியர்கள் சங்கக் கட்டடத் திறப்பு விழாவில் பேசும்போது "அரசின் வரி வருவாயில் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே செலவாகிறது" என்று சொல்லி அரசு ஊழியர்கள் மீதான வெறுப்பை வெளிக்காட்டினார். அதோடு அரசு ஊழியர்கள் அனுபவித்து வந்த பல சலுகைகளை அதிரடியாகப் பறித்தார். அதனை எதிர்த்து அரசு ஊழியர்களும் ஆசிரியர்கள் 2003 ஜூலை 2-ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டத்தை முதலமைச்சர் ஜெயலலிதா அடக்குமுறையைப் பிரயோகித்து ஒடுக்கினார். போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களை விசாரணை நடத்தாமல் டிஸ்மிஸ் செய்யும் எஸ்மா சட்டத்தை 04-07-2003-இல் பிறப்பித்தார் ஜெயலலிதா. அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை எல்லாம் நள்ளிரவில் வீடு தேடிப் போய்க் கைது செய்து சிறையில் அடைத்தனர். 200-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் சங்கங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்தனர். ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களை ஒரே கையெழுத்தில் டிஸ்மிஸ் செய்தனர். 'ஸ்டிரைக் செய்ய மாட்டோம்' என்ற உறுதிமொழியுடன் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிப் பலரை மீண்டும் வேலைக்குச் சேர்த்தார்கள். "கடமையைச் செய்யக் காத்திருக்கிறோம் அரசு ஊழியர்களுக்கு மறுவாழ்வு தாருங்கள்" என முதல்வர் ஜெயலலிதாவுக்குத் தலைமைச் செயலக ஊழியர் சங்கத் தலைவர் பாண்டுரங்கன் விடுத்த கோரிக்கையை எல்லாம் ஜெயலலிதா புறந்தள்ளினார்.

### அரசுப்பள்ளி ஆசிரியர்களை அவமானப்படுத்திய பழனிசாமி!

ஜெயலலிதாவுக்குக் கொஞ்சமும் சளைத்தவர் அல்ல பழனிசாமி. ஜெயலலிதாவின் வழித்தோன்றலான பழனிசாமிதான் முதலமைச்சராக இருந்தபோது தொடக்கப் பள்ளி ஆசிரியர் வாங்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு "இவ்வளவு சம்பளமா?" என இழிவுபடுத்தினார். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பார்த்து "அதிக சம்பளம் வாங்கும் நீங்கள் போராடலாமா?" என தனது வெறுப்பை வெளிப்படுத்தினார்.

பழனிசாமி ஆட்சியில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும், 7-ஆவது ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ 2019 ஜனவரியில் போராட்டத்தை நடத்தியது. அன்றைக்கு பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்கு பொறுப்பு வகித்த அமைச்சர் ஜெயக்குமார் தனது வழக்கமான கேலி கிண்டல் பத்திரிகையாளர் சந்திப்பைப் போலவே அந்தப் போராட்டத்தையும் டீல் செய்தார். "கோரிக்கையை ஏற்க முடியாது. பணிக்குத் திரும்பாவிட்டால் நடவடிக்கை பாயும்" என்றெல்லாம் மிரட்டல் விடுத்தார். "அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தர, மக்களிடம் கூடுதல் வரி விதிக்க வேண்டி வரும்" எனக் காட்டமாகச் சொன்னார்.

அரசு ஊழியர் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது 2019 ஜனவரி 27-ஆம் தேதி அனைத்து நாளிதழ்களிலும் முக்கால் பக்கத்துக்கு அமைச்சர் ஜெயக்குமாரின் பெயரில் விளம்பரம் வெளியிட்டது பழனிசாமி அரசு. 'பிற தனியார் நிறுவனத்தைக் காட்டிலும் அதிகச் சம்பளத்தை அரசு ஊழியர்கள் பெறுகின்றனர்' எனச் சொல்லி அரசு ஊழியர்களின் சம்பள விகிதத்தையும் அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டு அரசு ஊழியர்களை அவமானப்படுத்தியது யார்? 'தனியாரைவிட அரசு ஊழியர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள் அவர்களுக்கு எதற்குப் போராட்டம்?' என அந்த விளம்பரத்தில் கேள்வி எழுப்பியது எல்லாம் பச்சைப் பொய் பழனிசாமிக்கு மறந்துவிட்டதா? இந்த விளம்பரத்தை அனைத்து நாளிதழ்களிலும் அனைத்துப் பதிப்புகளிலும் அந்த விளம்பரத்தை வெளியிடுவதற்காக 50 லட்சம் ரூபாயைச் செலவழித்தனர்.

இதேபோலதான் அரசுப் போக்குவரத்துத் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தையும் ஒடுக்கியது பழனிசாமி அரசு. ஜாக்டோ-ஜியோ போராட்டத்தைப் போலவே பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டது பழனிசாமி அரசு. அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 13-ஆவது ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஊதிய உயர்வு விவரங்களைத் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடுவதற்காக அன்றைக்கு 46,54,361 ரூபாய் செலவிட்டனர்.

பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது செப்டம்பர் 7, 2017-ஆம் தேதி முதல் புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து, 7-வது ஊதியக் குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 9 நாட்கள் தொடர் போராட்டம் நடத்தினார்கள். அவர்களின் போராட்டத்தையும் கோரிக்கைகளையும் சிறிதும் மதிக்காமல் 85 ஆயிரம் பேருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப உத்தரவு பிறப்பித்த அரசுதான் அ.தி.மு.க. அரசு. இப்போராட்டங்களுக்குப் பிறகுதான் அன்றைய அ.தி.மு.க. அரசு 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியது. இன்று அதனைத் தனது சாதனையாக குறிப்பிடும் பழனிசாமி அவர்களின் உள்ளத்தில் உண்மை இருந்தால் அதைச் சொல்வதற்குக் கூசியிருக்க வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக 2016, 2017, 2019 ஆண்டுகளில் பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராடிய அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பழிவாங்கும் நோக்கில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் மீது குற்றக் குறிப்பாணைகள் (17b), இடமாற்றம், பணியிடைநீக்கம், வழக்கு போன்ற ஒடுக்குமுறைகளை ஏவிய பழனிசாமி "எங்களது ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்த முடியும்" எனக் கூறுவது பச்சைப் பொய்யாகும். "கெட்டிக் காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்பார்கள் ஆனால் பழனிசாமி அடித்து விடுகின்ற பொய்கள் எட்டு நிமிடத்திற்குக் கூட தாங்காது.

ஆட்சியில் இருந்தபோது அரசு ஊழியர்களை ஒடுக்கிய பழனிசாமி இன்றைக்கு அரசு ஊழியர்களுக்காக அக்கறை நாடகம் நடத்துகிறார். "பிரதான எதிர்க்கட்சி என்பது ஒரு நிழல் அரசைப் போன்றது. அது சுட்டிக் காட்டும் குறைகளை, நேர்மையான ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்வார்கள்' எனச் சொல்லியிருக்கிறார் பழனிசாமி. ஆட்சியில் இருந்த போது Sadist Government போல ஆட்சி நடத்தி அரசு ஊழியர்களை ஒடுக்கியவர்கள் இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

### அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்த அ.தி.மு.க. அரசு!

அரசு ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாரால், எப்போது திரும்பப் பெறப்பட்டது என்பதை அரசு ஊழியர்கள் அறியாதவர்கள் இல்லை. 2021-ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பதவியேற்றவுடன் 13.10.2021 அன்று வெளியிட்ட அரசாணையில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் போராட்டம் நடத்திய அரசு ஊழியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் திரும்பப் பெறப்பட்டன.

அ.தி.மு.க. ஆட்சியில் அரசு ஊழியர்கள் மீது நிகழ்த்தப்பட்ட ஒடுக்குமுறைகளை நீக்கிய அரசு திராவிட மாடல் அரசு. மேலும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் செயல்படும் இந்த அரசு அரசு ஊழியர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் கடமையை என்றும் கைவிட்டதில்லை. அரசு ஊழியர்களுக்கும் தி.மு.க.விற்கும் இடையிலான உறவு மிகவும் வலிமையானதாகும். அதில் பிளவு ஏற்படுத்தலாம் என பகற்கனவு காணும் பழனிசாமியின் மீது அனுதாபம் கொள்ளலாமே தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை.

தொடர்ந்து அரசு வேலை வாய்ப்புகளை அதிகமாக உருவாக்கி இளைஞர்களுக்கு வழிகாட்டும் அரசாக விளங்கும் இந்த அரசு, அரசு ஊழியர்களின் நலனைப் பாதுகாத்தும் அவர்கள் நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. அதற்குச் சான்றாய் விளங்குவதுதான் தொடர்ந்து தேர்தல்களில் அரசு ஊழியர்கள் தி.மு.க.விற்கு அளித்து வரும் வெற்றிகள்.

'கபட வேடதாரி' பழனிசாமியையும் அ.தி.மு.க.வையும் அரசு ஊழியர்கள் நம்ப மாட்டார்கள். அரசு ஊழியர்கள் பக்கம் நிற்பதும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தி.மு.க.தான் என்பதை அரசு ஊழியர்கள் அறிவார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான வெறுப்பு அ.தி.மு.க.வின் உதிரத்திலேயே ஊறியிருக்கிறது என்பதை அரசு ஊழியர்கள் அறியாதவர்கள் அல்லர். இந்த உண்மைகளை மறைத்து விட்டுப் பழனிசாமி இன்று வடிக்கும் முதலைக்கண்ணீரைப் பார்த்தால் முதலையே தோற்றுவிடும் போலிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய திமுக சார்பில் BLA 2 BLC பாகம் முகவர்கள் ஆய்வுக் கூட்டம் ஒன்றிய செயலாளர் பி.டி. சந்திரன், ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன்ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினர். உடன் நிர்வாகிகள் வழக்கறிஞர் முரளி, எஸ்.குமரன், ம.கிரண்,முரளி சேனா, ஜி.சித்திக் அலி, பொன் சு. பாரதி, கோவர்தன், வி.வி.மணி, சிவகுமார், செல்வம், குமரேசன், ராஜேந்திரன், தேவராஜன், வரால், உள்பட பலர் உள்ளனர்

## நவ. 14, 15 தேதிகளில்

# சார் பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன்கள்!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



சென்னை, நவ.13- வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (12.11.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பதிவுத்துறையில் கடந்த 2023-2024 நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்கள் (அக்டோபர் மாதம் வரை) வருவாய் ரூ.10511 கோடி. நிகழும் 2024-2025 நிதி ஆண்டில் முதல் ஏழு மாதங்கள் (அக்டோபர் மாதம் வரை) வருவாய் ரூ.11733 கோடி. கடந்த நிதி ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இந்த நிதி ஆண்டின் அக்டோபர் மாதம் வரை கூடுதலாக ரூ.1222 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

ஐப்பசி மாதத்தின் சுப முகூர்த்த தினங்களான வருகின்ற 14.11.2024 (வியாழன்) மற்றும் 15.11.2024 (வெள்ளி) ஆகிய தினங்களில் ஒரு சார் பதிவாளர் உள்ள அலுவலகங்களில் 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களில் 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும், அதிக அளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களில் 100க்கு பதிலாக 150 சாதாரண முன் பதிவு வில்லைகளும், ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக வழங்கிட அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டத்தில் அமைச்சர், பதிவு செய்த ஆவணங்களை அதே நாளிலே திருப்பி ஒப்படைத்தல் (களப்பணி மேற்கொள்ள வேண்டிய ஆவணங்களை தவிர்த்து), ஆவணங்கள் பதிவு செய்தவுடன் தன்னிச்சையாக இணையவழி பட்டா மாற்றம் செய்வதை தெரிவு செய்தல், வில்லங்கச்சான்று மற்றும் சான்றிடப்பட்ட நகல்கள் இணைய வழியில் விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக அவர்களின் உள்நுழைவிற்கே இணையதளம் வழி அனுப்பிவைத்தல், நிலுவை ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் தற்போதைய நிலை குறித்த விவரங்கள், தணிக்கை பிரிவு அலுவலர்களின் பணிகள், முக்கிய பதிவேடுகளை பராமரித்து கண்காணித்தல், உள்ளிட்ட பணிகளின் விவரங்களை கேட்டறிந்து, அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் உடனுக்குடன் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் பதிவுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.